# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,362—1962 ඔක්තෝබර් 26 වැනි සිකුරාදා—1962.10.26

13,362 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு ஒற்ரூேபர் மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 567 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 565 | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சேமிப்பு வங்கி

இலங்கைச் சேமிப்பு வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (அத். 399) 12 ம் பிரிவின் கீழ் அதிபர் சபையினுல் ஆக்கப்பட்டு, சொல்லப்பட்ட 12 ம் பிரிவின் கீழ் நிதியமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.

நிதியமைச்சரின் நிரந்தரச் செயலாளர்.

கொழும்பு,
1962 ம் ஷ ஒற்ரூேபர் மீ 18 ந் வ.

விதி

1928 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ந் திகதி 7,676 ம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட, வீட்டைப் பிணையாகக் கொண்டு கொடுபடும் கடன் சம்பந்தமான விதிகள் பின்வரும் புதிய விதியைச் சொல்லப்பட்ட அவ்விதிகளின்பின் சேர்த்தல் மூலம் திருத்தப்படுகின்றன :—

10 (1) மேற்கூறிய விதிகளின் ஏற்பாடுகளுக்கமைவாகவும், இவ் விதியின் பின்வரும் ஏற்பாடுகளுக்கமைவாகவும், மாநகர சபைக்குட் பட்ட இடங்களில் அல்லது நகர சங்கமொன்றின் எல்லைக்குட்பட்ட இடங்களில் வீடு கட்டுவதற்கான கடன் ஒன்று விண்ணப்பிக்கப்பட்டு, கொடுபடலாம்.

(2) முதலாம் பந்தியின் கீழ் கடனென்றுக்கு விண்ணப்பஞ் செய்பவர் :—

(அ) உள்ளூர் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற வீட்டு மாதிரிப்படங்களையும், அளவுகளையும்,

(ஆ) வீடு கட்டுவதற்கு வேண்டிய விரிவான மதிப்பீடுகளையும், செலவுகளையும் அனுப்புதல் வேண்டும்.

(3) விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அதிபர் சபையினர் வேறு விதமாகக் கட்டளையிட்டாலன்றி, அக்கடன் நான்கு சமமான தவணைப்பணங்களாகப் பின்வருமாறு கொடுபடுதல் வேண்டும் :—

(அ) வீட்டின் அத்திவார வேலை முடிவடைந்ததும், அங்கீகரிக்கப்பட்ட கடனில் நாலிலொருபங்குக்குச் சமமான ஒரு தொகை ;

(ஆ) வீட்டின் சுவர்கள் கூரை மட்டத்தளவுக்கு எழுப்பப்பட்டதும் கடனில் நாலிலொரு பங்குக்குச் சமமான இன்னெருதொகை;

(இ) வீட்டின் கூரைவேலை முடிவடைந்ததும் கடனில் நாலிலொரு பங்குக்குச் சமமான மேலுமொரு தொகை ;

(ஈ) வீடு கட்டி முடிவடைந்ததும், மிகுதியாயுள்ள கடனின் நாலி லொரு பங்குக்குச் சமமான ஒரு தொகை ;

(4) முதலாவது தவணைப் பணத்தைப் பெறமுன், விண்ணப்பம் செய்பவர்—

(அ) வீடு கட்டத் தொடங்குவதற்கும், (3) ம் பந்தியில் விதிக்கப் பட்டுள்ளவாறு தவணைப்பணமாகக் கொடுபடும் கடனைக் கொண்டு கட்டி முடிப்பதற்கும் தம்மிடம் போதிய அளவு பணமிருக்கிறதென்று அதிபர் சபையைத் திருப்திப்படுத்தல் வேண்டும் ; மேலும்,

(ஆ) அதிபர் சபை குறிப்பிடுங் காலத்துக்குள்ளாக வீட்டுக்கட்டிட வேலை முடிவடையுமென்று, சொல்லப்பட்ட சபைக்குப் பொறுப்பொன்றும் கொடுத்தல் வேண்டும்.

(5) இவ்விதியில்—

(அ) " மாநகர சபைக்குட்பட்ட இடம் " என்பது கொழும்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக் குட்பட்டஇடம் எனக் கருதப்படும்.

(ஆ) " நகர சங்க எல்லைக்குட்பட்ட இடம் " என்பது மாநகர சபைக் குட்பட்ட இடங்களுக்கருகாமையிலுள்ள நகர சங்கத்தின் அல்லது பட்டண சங்கத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடம் எனக் கருதப்படும்.

(இ) " உள்ளூர் அதிகார சபை " என்பது சந்தர்ப்பத்துக் கேற்றபடி, மாநகர சபை, நகர சங்கம் அல்லது பட்டின சங்கம் எனக் கருதப்படும்.

10–1021

## 1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் 68 வது பிரிவின் கீழ் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 6 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத்தாபன 2 ம் இலக்க ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. சட்டத்தின் 42 வது பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட எவரும், தம்மால் கைச்சாத்திடப்பட்ட அறிவித்தலை ஆதனத்தின் சொந்தக்காரருக்கோ, அல்லது சொத்தின் பொறுப்பாளியாய் இருப்பவருக்கோ அல்லது அச்சொத்தில் இருப்பவருக்கோ அல்லது அச்சொத்து எவரொருவருக்மிருக்கின்றதோ அவருக்குக் கொடுத்த பின்னர் அல்லது அவ்வித அறிவித்தலை அவ் ஆதனத்தில் ஒரு பகிரங்கமான இடத்தில் அல்லது அதன் சுற்றுடலில் பார்வைக்கு வைக்கச் செய்த பின்னர் எந்நேரத்திலாவது தமக்கு அப்பிரிவின் கீழ் அல்லது இவ்வொழுங்கு விதிகளினுல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் உபயோகிக்கலாம்.

3. தமக்களிக்கப்பட்ட அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எவற்றையேனும் பிரயோகிப்பதற்காக, சட்டத்தின் 42 வது பிரிவின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவர் எவரும் தேவையான ஆட்கள், கருவிகள், ஆயுதங்கள், வாகனங்கள் முதலியவற்ருேடு தேவைப்படின் சொல்லப்பட்ட அவ் ஆதனத்துக்குள் பிரவேசிக்கலாம், பரிசோதிக்கலாம், அளக்கலாம், எல்லையிடலாம், இன்னும் தேவையாகும் அத்தகைய வேறு நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

4. எவ் ஆதனத்தின் சொந்தக்காரரும், அதன் பொறுப்பையுடையவரும் அதில் வசிப்பவரும், ஆட்சியில் உள்ளவரும் கீழ்க்கண்டவற்றைச் செய்யக் கடமைப்பட்டவர்களாகிருர்கள்.

(அ) சட்டத்தின் 42 வது பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு அவரால் கேட்கப்படும் அத்தகைய செய்திகளைக் கொடுத்தல்.

(ஆ) அவ ஆதனத்தைப் பொறுத்த இருப்புப் பொருட் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், ஆதன இடாப்புகள். உண்டியல்கள், அளப்பு பொருட்பட்டியல், இன்வோயிசுகள், உறுதிகள், வேறு சாதனங்கள் ஆகியவற்றைக் கொடுத்தல்.

(இ) 42 வது பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்குத் தேவையான உதவிகளை அளித்தல்.

5. சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழான அதிகாரங்கள் எல்லாவற்றை யுமோ அல்லது அவற்றில் எவற்றையோ பிரயோகிப்பதற்காக அப்பிரிவின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவரோ அல்லது வழங்கப்பட்டவர்களோ :—

(அ) ஏதாவது ஆதனத்தைப்பற்றி எவராவது அல்லது எவ் ஸ்தாபனமாவது வைத்திருக்கும் அல்லது பரிபாலித்துவரும் பதிவுப் புத்தகம், சாதனப் புத்தகம் அல்லது உறுதி எதனையேனும் தருவிக்கலாம், அவற்றைப் பரிசோதித்துப் பிரதிகள் எடுக்கலாம்.

(ஆ) அவ் ஆதனங்களைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்ட ஒரு தேதிக்கு முன்னர் கொடுக்கும்படி எவரையாவது பணிக்கலாம்.

6. இவ் ஒழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதமாக வேண்டி நின்றுலன்றி " சட்டம் " என்பது 1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத்தாபனச் சட்டம் எனப் பொருள்படும்.

" ஆதனம் " என்பது பெற்றேலியத்தின் இறக்குமதி செய்வதற்காகவும், ஏற்றுமதி செய்வதற்காகவும், சேமித்து வைத்திருப்பதற்காகவும், விற்பனை, வழங்கல், விநியோகம் ஆகியவற்றிற்காகவும் அல்லது அவ்வித இறக்குமதி, ஏற்றுமதி, சேமிப்பு, விற்பனை, வழங்குதல், விநியோகம் ஆகியவற்றிற்கு உதவியாகவிருக்கும் அல்லது அதன் பயனுல் ஏற்படும் அத்தகைய வேறு தொழில்களைச் செய்வதற்காகவும் உபயோகிக்கப்பட்ட அல்லது உபயோகிக்கப்படுகிற, அல்லது உபயோகப்படவிருந்த அசைவுள்ள அசைவற்ற ஆதனம் எனப் பொருள்படும்.

10—465/1.

---

## 1961 ம் ஆண்டின் 28 ம் இலக்கப் பெற்றேலியக் கூட்டுத்தாபனச் சட்டம்

1961 ம் ஆண்டின் 28 ம் இலக்க இலங்கைப் பெற்றேலியக் கூட்டுத் தாபனச் சட்டத்தின் 34 (9), 68 ஆகிய பிரிவுகளின்கீழ் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்சேவை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

ரி. பி. இலங்கரத்ன,
வர்த்தக, வியாபார, உணவு,
கப்பற்சேவை அமைச்சர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 6 ந உ.

### ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள் இலங்கை பெற்றேலியக் கூட்டுத்தாபன 3 ம் இலக்க ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. அறிவித்தல் செய்யப்பட்ட ஏதாவது ஆதனத்தை பரிசோதித்து அதன் நிலை பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும்படி கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபன ஊழியர் எவருக்காவது அல்லது வேறு எவருக்காவது அதிகாரம் வழங்கலாம்.

3. 2 வது ஒழுங்கு விதிகளின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட எவராவது தம்மால் கைச்சாத்திடப்பட்ட அறிவித்தலை, அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்கோ அல்லது பொறுப்பாளியாயிருப்பவருக்கோ அல்லது அதில் குடியிருப்பவருக்கோ அல்லது அதன் ஆட்சியிலிருப்பவருக்கோ கொடுத்த பின்னர் அல்லது அவ்வித அறிவித்தலை, அவ்வறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனத்தின் ஒரு பகிரங்கமான இடத்தில் அல்லது அதன் சுற்றுடலில் பார்வைக்கு வைத்தபின்னர், இவ்வொழுங்கு விதிகளால் வழங்கப்படும் அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் பிரயோகிக்கலாம்.

4. தமக்களிக்கப்பட்ட அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதனையேனும் பிரயோகிப்பதற்காக 2 வது ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவர் எவரும் தேவையான ஆட்கள், கருவிகள், ஆயுதங்கள், வாகனங்கள் முதலியவற்ருேடு தேவைப்படின் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனத்துக்குள் பிரவேசிக்கலாம், பரிசோதிக்கலாம், அளக்கலாம், எல்லை இடலாம், இன்னும் தேவையாகும் அத்தகைய வேறு நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

5. அறிவித்தல் கொடுக்கப்பட்ட எவ் ஆதனத்தின் சொந்தக்காரரும் அதன் பொறுப்பையுடையவர், அதில் குடியிருப்பவர், ஆட்சியிலிருப்பவர் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவாறு நடக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் :—

(அ) 2 வது ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு அவரால் கேட்கப்படும் செய்திகளைக் கொடுத்தல்.

(ஆ) அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனத்தைப் பொறுத்த இருப்புப் பொருட் புத்தகங்கள், கணக்குப் புத்தகங்கள், ஆதன இடாப்புகள், உண்டியல்கள், அளப்பு பொருட் பட்டியல், இன்வோயிசுகள், உறுதிகள், வேறு சாதனங்கள் ஆகியவற்றைக் கொடுத்தல்.

(இ) 2 வது ஒழுங்கு விதிகளின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவருக்கு கட்டளைச் சட்டத்தின் கீழோ அல்லது இவ்வொழுங்கு விதிகளின் கீழோ அவருக்கு வழங்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளைச் செய்வதற்கும் தேவையான அத்தகைய உதவிகளை அளித்தல.

6. இவ்வொழுங்கு விதிகளின் கீழ் நிலைமை பற்றிய அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் நோக்கத்துக்கென 2 வது ஒழுங்கு விதிப்படி அதிகாரம் வழங்கப்பட்ட எவரும் :—

(அ) அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனம் பற்றி எவராவது அல்லது எவ் ஸ்தாபனங்களாவது வைத்திருக்கும் அல்லது பரிபாலித்து வரும் பதிவுப்புத்தகம், சாதனப் புத்தகம், அல்லது உறுதி எதனையேனும் தருவிக்கலாம். அவற்றைப் பரிசோதித்துப் பிரதிகள் எடுக்கலாம்.

(ஆ) அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனத்தைப் பொறுத்த செய்திகளை குறிப்பிட்ட ஒரு தேதிக்கு முன்னர் கொடுக்கும்படி எவரையாவது பணிக்கலாம்.

7. 2 வது ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட எவ்வாதனம் சம்பந்தமாகவும் அதன் நிலைமை பற்றிய அறிக்கையைத் தயாரித்த பின்னர் அவ்வறிக்கையின் பிரதியொன்றை ஆதனச் சொந்தக்காரருக்கோ அல்லது அதன் பொறுப்பையுடையவருக்கோ அல்லது அதில் குடியிருப்பவருக்கோ அல்லது ஆட்சியிலிருப்பவருக்கோ கொடுத்தல் வேண்டும். அவ்வாதனம் இருக்கும் இடத்திலும் அவ்வறிக்கையின் பிரதியொன்று இருக்கவேண்டும்.

8. அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றைப் பெற்றவர் ஒவ்வொரு வரும் அவ்வித அறிக்கையை அவர் ஏற்றுக்கொள்கிறாரா அல்லது இல்லையா என்பதை கூட்டுத்தாபனத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

9. அவ்வித அறிக்கையை எவரேனும் ஏற்றுக்கொள்ளாதவிடத்து அவர் தான் கூறும் மறுப்புக்களையும் அத்தகைய மறுப்புகள் எவ்வடிப் படையில் செய்யப்படுகின்றன என்பதையும் எழுத்துமூலம் தெரிவித்து, தன் மறுப்புக்கு ஆதாரமான சாதனங்களையும் தனக்குச் சாதகமானவை யெனக் கருதும் வேறு விடயங்களையும் கூட்டுத்தாபனத்திற்கு தெரிவிக்க வேண்டியது அவரின் கடமையாகும்.

10. அதன் சார்பில் நிலைமை பற்றி அறிக்கை தயாரிக்கப்படுகின்ற தான அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனம் எதுவும் சுவீகரிக்கப்படு மிடத்து அல்லது கூட்டுத்தாபனத்திடம் சேர்க்கப்படுமிடத்து 2 வது ஒழுங்கு விதிகளின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டவர் அவ்வாதனம் சுவீகரிக்கப்படினும் கூட்டுத்தாபனத்திடம் சேர்க்கப்பட்டிருப்பினும் இவ் வொழுங்கு விதிகளின் கீழ் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்து நிலைமைபற்றிய அறிக்கையைச் செய்து முடிக்க வேண்டும். அவ்வறிக்கை 2 வது ஒழுங்கு விதியின் கீழ் அதிகாரம் வழங் கப்பட்டவரால் கைச்சாத்திடப்பட்டதும் அது கூட்டுத்தாபனத்திடம் சேர்க்கப் பட்ட அல்லது அதற்காக சுவீகரிக்கப்பட்ட அவ் ஆதனத்தின் நிலைமை பற்றி கூட்டுத்தாபனத்தில் அல்லது அதன் அதிகாரத்தின் கீழ் செய்யப் பட்ட அறிக்கையாகக் கணிக்கப்படல் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதமாக வேண்டி நின்றாலன்றி " சட்டம் " என்பது 1961 ம் ஆண்டின் 28 வது இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டம் எனப் பொருள்படும்.

" கூட்டுத்தாபனம் " என்பது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத தாபனத்தைப் பொருள்படும்.

" அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஆதனம் " என்பது 1961 ம் ஆண்டின் 28 வது இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் உள்ள கருத்தையே உடையதாகும்.

10–465/2

---

### சம்பளச் சபைச் சட்டம்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம் கனம் தொழில், தேசியமய சேவை மந்திரி பின்வரும் நியமனங்களை மகிழ்ச்சியுடன் செய்துள்ளாரென்று 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறி விக்கப்படுகின்றது :—

(1) மோட்டார்ப் போக்குவரத்துச் சம்பளச் சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாகவிருந்த திரு. கே. எம். யு. ஜயனெத்தி தாமாக விலகியதால் அவருக்குப் பதிலாக திரு. ஈ. பி. த சேரம் என்பவர் ;

(2) மோட்டார்ப் போக்குவரத்துச் சம்பளச் சபையில் நியமன அங்கத்தவ ராக இருந்த திரு. எஸ். பீ. யட்டவர தாமாக விலகியதால் அவருக்குப்பதிலாக ஜே. எல். சீ. ரொட்ரிகோ என்பவர்.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரி,
காரியாலய நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஞு ஒக்ரோபர் மீ 16 ந உ.

10–936

---

### சம்பளச் சபைச் சட்டம்

#### அறிவித்தல்

கட்டடத்தொழில், அச்சடிப்புத்தொழில், இயந்திரத்தொழில் ஆகியவற்றிற் குரிய சம்பளச் சபைகளில் நியமன அங்கத்தவராக இருந்த திரு. எல். எச். சுமணதாச 1962 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 1 ம் தேதி தொடக் கம் இத்தீவில் இல்லாத காலத்து, அவருக்குப்பதிலாக தற்காலிகமாகக் கடமையாற்ற திரு. ரீ. ஒ. பி. பர்ணந்து என்பவரை, (136 ம் அத்தியாய மாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசியமய சேவை மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வி. சா. ம. த மெல்,
தொழில், தேசியமய சேவை மந்திரிகாரியாலய
நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,
1962 ம் ஞு ஒக்ரோபர் மீ 16 ந உ.

10–946

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### துப்பாக்கி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்

#### கண்டி மாவட்டம்—1963

1963 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகை மாதம் 15 ந் திகதியிலிருந்து 1962 ம் வருட துப்பாக்கி அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப்படும். துப்பாக்கியின் சொந்தக்காரர்கள் தாங்கள் வசிக்கும் பிரிவு காரியாதி காரிக்கு மனுச் செய்தல் வேண்டும். கண்டி நகரசபை எல்லைக்குள்ளும் கங்கவட்ட கோரளைக்குள்ளும் வசிக்கும் துப்பாக்கியுடையவர்கள் கண்டி பிரிவு காரியாதிகாரிக்கு மனுச் செய்தல் வேண்டும். கண்டி மாவட்டத்தி லுள்ள காரியாதிகாரிகளின் விலாசம் பின்வருமாறு :—

(1) பிரிவுக் காரியாதிகாரி, பாத்தஹேவாஹெட்ட, கெட்டவெல, லேவுல.
(2) பிரிவுக் காரியாதிகாரி, பாத்த தும்பர, லேடெண்ட் பங்களா, கட்டுகஸ்தொட்ட.
(3) பிரிவுக்காரியாதிகாரி, உடபுளத்கம, நாவலப்பிட்டி.
(4) பிரிவுக் காரியாதிகாரி, உடுநுவர யட்டிநுவர, ஈரியகம, பேரா தெனிய.
(5) பிரிவுக் காரியாதிகாரி, உடபலாத்த, கம்பளை.
(6) பிரிவுக் காரியாதிகாரி, காரிஸ்பத்து, சீகிரிபடமாளிகை, கட்டுகஸ் தொட்ட.
(7) பிரிவுக் காரியாதிகாரி, உடதும்பர, உண்ணஸ்கிரிய.
(8) பிரிவுக் காரியாதிகாரி, தும்பனே, கலகெதற.

2. துப்பாக்கி அனுமதிப்பத்திர கட்டணத்திற்காக முத்திரைகள் ஏற் றுக்கொள்ளப்படமாட்டாது. அனுமதிப் பத்திரங்கள் காணமல் போயிருந் தால் புதுப்பிக்கும் காலத்திற்குமுன் கண்டி அரசாங்க அதிபரிடமிருந்து ஒரு ரூபாய் செலுத்தி சாத்திகைப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும். பழைய அனுமதிப் பத்திரங்கள் அல்லது காணமற் போவதற்குரிய சாத்திகைப் பத்திரம் காட்டாவிடில் அனுமதிப் பத்திரங்கள் புதுப்பிக்கப் படமாட்டா. 1962 ம் வருடம் (டிசெம்பர்) மார்கழி மாதம், 31 ந் திகதிக்கு முன் தங்களுடைய அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்காதவர்கள் அனு மதிப்பத்திரக் கட்டணத்திற்கு சமமான அபராதத்திற்கு ஆளாவார்கள்.

3. 1963 ம் வருடம் (மார்ச்) பங்குனி மாதம் 31 ம் திகதிவரை இந்த அபராதத்தை அறவிட்டுக்கொண்டு பிரிவு காரியாதிகாரிகளால் அனு மதிப்பத்திரத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும். அதற்குப்பின் கண்டிக் கச்சேரியில் புதுப்பிக்கப்படும். 1963 ம் வருடம் (மார்ச்) பங்குனி மாதம் 31 ந் திகதிக்கு முன் தங்கள் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கத் தவறியவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்.

4. ஒரு துப்பாக்கி பாவிக்கமுடியாத நிலைமையிலிருந்தால் அத் துப்பாக்கியை 1962 ம் வருட அனுமதிப் பத்திரத்துடன் நேர் முகதாவில் அல்லது கிராம ஆராச்சிமூலம் (அவரிடமிருந்து பற்றுச் சீட்டும் பெற வேண்டும்) கச்சேரியில் அல்லது பொலிசில் 1962 ம் வருடம் (டிசெம்பர்) மார்கழி மாதம் 31 ந் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவேண்டும். அல்லாவிடில் அனுமதிப் பத்திரக்காரர் 1963 ம் ஆண்டிற்கான வழக்கமான கட்டுப் பணம் செலுத்தி அனுமதிப் பத்திரம் எடுக்கவேண்டும்.

சீ. ஜே. சேரசிங்ஹ,
கண்டி அரசாங்க அதிபர்.

கண்டிக் கச்சேரி,
1962 ம் ஞு (ஒற்றோபர்) ஐப்பசி மீ 27 ந உ.

10–1030

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை **பி. ப. 3.30 மணி**) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

***அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும்.** அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய **சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.***

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.